பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
28 12 2025 SUNDAY 12 40 PM
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பாதுகாப்பு, அறிவியல், விளையாட்டு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நாடு தனது வலுவான முத்திரையை பதித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

   **காசி தமிழ்ச் சங்கமத்தை அடுத்து அப்பகுதியில் உள்ள 50க்கு மேற்பட்ட பள்ளிகளில் தமிழ் மொழியை கற்பது குறித்த இயக்கம் நடத்தப்பட்டுள்ளதாக பிரதமர் கூறியுள்ளார்.

2. புதுதில்லியில் நடைபெற்று வரும் மாநில தலைமைச்செயலாளர்களின் மூன்று நாள் தேசிய மாநாடு, இன்று நிறைவடைகிறது.

3. பிரிட்டனில் இளைஞர்கள் ராணுவத்தில் இணைந்து பணியாற்றுவதற்கான புதிய திட்டத்தை அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

4. Solapur சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் வைதேகி சௌத்ரி பட்டம் வென்றார்.

>>>>>><<<<<<

பாதுகாப்பு, அறிவியல், விளையாட்டு உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் நாடு தனது வலுவான முத்திரையை பதித்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்கிபாத் நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், 2025 நாட்டிற்கு மேலும் தன்னம்பிக்கையை அளித்த ஆண்டாக அமைந்தது என்று தெரிவித்தார்.

வரும் புத்தாண்டில் புதிய நம்பிக்கைகள். புதிய உறுதிப்பாடுகளுடன் முன்னேறிச் செல்ல நாடு தயாராக இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

(Sound Byte - பிரதமர் (1) - 40 Sec. )

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் உரையாடல் நிகழ்ச்சி தொடர்பாக நடைபெற்ற வினா-விடை போட்டியில், தமிழகம் முதலிடம் பெற்றுள்ளதை திரு. நரேந்திர மோடி சுட்டிக்காட்டினார்.

*Smart India Hackathon* நிறைவு நிகழ்ச்சி இம்மாதம் நடைபெற்றதாக கூறிய பிரதமர், இதில் 80க்கும் மேற்பட்ட அரசு துறைகளில் உள்ள 270-க்கும் மேற்பட்ட டிஜிட்டல் பிரச்சினைகளுக்கு மாணவர்கள் தீர்வுகளை அளித்துள்ளதாக தெரிவித்தார்.

இன்றைய வாழ்க்கை, தொழில்நுட்பம் சார்ந்துள்ளது என்றும், ரோபோக்கள் மனிதர்களின் இடத்தை பிடித்து விடுமோ என்று மக்கள் கவலை தெரிவித்ததாக அவர் கூறினார்.

மக்களின் கோரிக்கைகளை ஏற்று, இந்திய அறிவியல் கல்விக் கழகத்தில், இசை வகுப்பு தொடங்கப்பட்டுள்ளதை பிரதமர் சுட்டிக்காட்டினார்.

*Fiji* நாட்டில் *Raki Raki* பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் முதல்முறையாக தமிழ் தினம் கொண்டாடப்பட்டதாக கூறிய திரு. நரேந்திர மோடி, குழந்தைகள் தமிழில் கவிதைகளை வழங்கியதாகவும் தெரிவித்தார்.

தமது நாடாளுமன்ற தொகுதியில் காசி தமிழ்ச் சங்கமத்தின் நான்காவது ஆண்டு கொண்டாட்டம் வெகுசிறப்பாக நடைபெற்றதை சுட்டிக்காட்டிய பிரதமர், தமிழ்மொழியை கற்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக தெரிவித்தார்.

காசியில் 50க்கு மேற்பட்ட பள்ளிகளில் இது தொடர்பான சிறப்பு இயக்கம் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் 77-வது குடியரசு தினம் அடுத்த மாதம் கொண்டாடப்படவுள்ள நிலையில், சுதந்திரத்திற்காக பாடுபட்ட வீரர்களை நினைகூர வேண்டும் என்று அனைவரையும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆண்டின், கடைசி மன்கிபாத் நிகழ்ச்சி இது என்று கூறிய பிரதமர், அடுத்த ஆண்டு இதே உற்சாகத்துடன் மனதின் குரல் நிகழ்ச்சியில் சந்திப்போம் என்று குறிப்பிட்டார்.

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படுகிறது.

>>>>>><<<<<<

புதுதில்லியில் நடைபெற்று வரும் மாநில தலைமைச்செயலாளர்களின் மூன்றுநாள் தேசிய மாநாடு, இன்றுடன் நிறைவடைகிறது.

இம்மாநாட்டில் நேற்று உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி, அரசு நிர்வாகம், சீர்திருத்தம் குறித்த பல்வேறு விஷயங்கள் குறித்து ஆக்கபூர்வமாக விவாதித்ததாக கூறினார்.

நேற்று முன்தினம் தொடங்கிய இந்த மாநாட்டில், மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்படுவது மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான திட்டங்களை செயல்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

சிறார்களுக்கான கல்வி, பள்ளிக் கல்வி, திறன் கல்வி, உயர்கல்வி மற்றும் விளையாட்டுப் பயிற்சி தொடர்பான விவாதங்கள் நடைபெற்றன.

மேலும், நிர்வாகத்தில் தொழில்நுட்பம், வேளாண், சுற்றுலா, சுயசார்பு இந்தியா உள்ளிட்ட பல்வேறு தலைப்பிலான கருத்தரங்குகளும் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<<

மறைந்த முன்னாள் அமைச்சர் அருண் ஜேட்லியின் பிறந்த நாளை ஒட்டி, புதுதில்லியில் மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங், திரு. ஜெ.பி. நட்டா, திரு. புபேந்தர் யாதவ், டாக்டர் ஜிதேந்திர சிங் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில், பிஜேபியின் மூத்த தலைவர்களும், நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<<

பிரிட்டனில் இளைஞர்கள் ராணுவத்தில் இணைந்து பணியாற்றுவதற்கான புதிய திட்டத்தை அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

>>>>>><<<<<<

Solapur சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் வைதேகி சௌத்ரி பட்டம் வென்றார்.

இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இவர், 3-6, 6-3, 6-4 என்ற செட்கணக்கில் ஜப்பானின் Michika Ozeki-யை வென்றார்.

>>>>>><<<<<<

சர்வதேச டென்னிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில், இந்தியாவின் Manas Dhamne, பல்கேரியாவின் Petr Nesterov-வை எதிர்கொள்கிறார்.

துனிஷியாவில் இப்போட்டி, பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

>>>>>>END<<<<<<